தினமலர் www.dinamalar.com www.facebook.com/Dinamalardaily
கோவை புறநகர்
கோவை பதிப்பில் அதிகம் விற்பனையாகும் நாளிதழ்
மேட்டுப்பாளையம் ● பெ.நா.பாளையம் ● கருமத்தம்பட்டி ● அன்னூர் ● சூலூர் ●
கோயம்புத்தூர் ● வியாழன் ● டிசம்பர் 19, 2024

செய்தி சாரல்: பில்லூர் அணையின், 100 அடி உயரத்தில், நேற்றைய நிலவரப்படி, 81.50 அடி நீர்மட்டம் இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 172 கன அடி நீர்வரத்து இருந்தது.

அதிகபட்சம் 36 °C குறைந்தபட்சம் 27 °C வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

# பணியின் போது விபத்து: மூதாட்டிக்கு மாதம் தோறும் உதவித்தொகை

**மேட்டுப்பாளையம், டிச. 19–**

மேட்டுப்பாளையத்தில் பணியின் போது ஏற்பட்ட விபத்தில் 61 வயது மூதாட்டி ஒருவருக்கு விரல் துண்டானதால், அவருக்கு இ.எஸ்.ஐ. காப்பீடு திட்டத்தின் கீழ் மாதம் தோறும் உதவித் தொகை வழங்குவதற்கான அனுமதி மற்றும் முதல் கட்ட உதவி தொகை நேற்று வழங்கப்பட்டது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் சிசிலி அந்தோணி சாமி, 61 என்ற பெண் பணி புரிந்து வந்தார். இவர் பராமரிப்புப் பிரிவில் பணி புரிந்து வந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் 21ம் தேதி, 2023ம் ஆண்டு, இயந்திரத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த போது, தவறுதலாக வலது கை சுண்டு விரல் நகங்கி காயம் ஏற்பட்டது. இதையடுத்து, மேட்டுப்பாளையத்தில் உள்ள தனியார் மருந்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் இ.எஸ்.ஐ., மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு விரல் துண்டிக்கப்பட்டது.

பணியின்போது விபத்து நடந்ததாலும், அவர் இ.எஸ்.ஐ. காப்பீடு திட்டத்தின் கீழ் பதிவு செய்து இருந்ததாலும், தொழிலாளர் அரசு காப்பிட்டுக் கழகம் சார் மண்டல அலுவலகம் கோவை, சார்பில் அவரது சம்பளத்தில் 5 சதவீதம் என்ற விகிதத்தில் நிரந்தர ஊனமுற்றோர் பலன் வழங்க உத்தரவிடப்பட்டது. அதன்படி, சிசிலி அந்தோனிசாமிக்கு வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு மாதமும் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன், சார் மண்டல அலுவலகம் சார்பில் உதவித் தொகை வழங்கப்படும்.

மேட்டுப்பாளையம் கிளை அலுவலகத்தின் கிளை மேலாளர் ஸ்ரீராஜ் சிவசங்கர், காசாளர் பிரியங்கா ஆகியோர் இ.எஸ்.ஐ. கிளை அலுவலகத்தில் நிரந்தர ஊனமுற்றோர் உதவித்தொகைக்கான அனுமதி உத்தரவு மற்றும் முதல் கட்ட உதவி தொகையை, நேற்று வழங்கினர்.